[1989 ஏப்ரல் 29

ஊத்தங்கரை வட்டத்தில் ஏரிகளை நிரப்புதல்

160—(*வினா எண். *393*) திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம் ஈச்சம்பாடி நீர்த்தேக்கத்திலிருந்து வீணாகும் நீரை ஊத்தங்கரை வட்டம் மண்ணுடிப்பட்டி மார்க்கமாக காட்டேரி, மூங்கலேரி, கீழ்க்குப்பம் வரை உள்ள ஏரிகளை நிரப்பி பாசனத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இல்லை

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, ஊத்தங்கரை வட்டம், மண்ணுடிப்பட்டி மார்க்கமாக காட்டேரி, மூங்கலேரி, கீழக்குப்பம் வரை உள்ள பிரதேசம் வறட்சியான பகுதி. விவசாயிகள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கின்றார்கள். இதனால், அரூர் வட்டம், ஈச்சம்பாடி அணையின் மழைக்கால உபரி நீரை அந்த ஏரிகளுக்கு விட்டு, விவசாயிகளுக்கு வேண்டிய நீர் வள ஆதாரத்தை உருவாக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, கேள்வி ஈச்சம்பாடி அணையிலிருந்து தண்ணீர் விடப்படுமா என்பது. ஈச்சம்பாடி அணை என்பது பொன்னையாற்றுக்கருகே சாத்தனூர் அணைக்கு மேலே கட்டப்பட்டிருக்கிறது. இது மழைக் காலத்தில் வரும் தண்ணீரைத் தேக்கி வைக்க உதவுகின்ற நீர்த் தேக்கமே தவிர, பாசனத்திற்கு உரியது அல்ல. எனவே, இதிலிருந்து தண்ணீர் விட முடியாது. சாத்தனூர் அணையிலிருந்தும் இதற்குத் தண்ணீர் திருப்புகின்ற வாய்ப்புகள் இல்லை. ஆகையினாலேதான் இந்தத் திட்டம் பரிசீலனையில் இல்லை என்பதை நான் தெரிவித்தேன்.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, நீர்த்தேக்க நீரிலிருந்து மழைக்காலங்களில் வரக்கூடிய வேஸ்டேஜ் நீரை அந்த ஏரிகளுக்கு திருப்பி விட்டால் உள்ளபடியே அது பலனளிக்கும். இது நல்லதொரு திட்டமாக அமையும். அரசு இதைப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, தற்போது பரிசீலனையில் இல்லை. வேண்டுமானால் எதிர்காலத்திலே பரிசீலிக்கும்.